بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/09/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை தொடர்பாக மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஈமானை வலுப்படுத்தும் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۞

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

மாநபி (ஸல்) அவர்களின் தவக்குல் அலல்லாஹ் (அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை) குறித்து கடந்த ஜுமுஆவில் விவரித்தேன். இன்றைய தலைப்பும் இதுவே ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்காக இறைநம்பிக்கை தொடர்பாக எவ்வாறு துஆ செய்து வந்தார்கள் என்பது பற்றி ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ருகூவிற்குச் செல்லும் போது இந்த துஆவை செய்வார்கள்: "யா அல்லாஹ்! உனக்காகவே நான் ருகூவு செய்தேன்; உன் மீதே நம்பிக்கை கொண்டேன்; என்னை உன்னிடமே ஒப்படைத்தேன்; உன் மீதே முழு நம்பிக்கை வைத்துள்ளேன். நீயே என் இறைவன். என் செவிப்புலனும், பார்வைத் திறனும், குருதியும், தசையும், எலும்புகளும், நரம்புகளும் அகிலங்கள் அனைத்துக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்குப் பணிந்துவிட்டன."

பின்னர் ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- எனக்கு ஏதேனும் துன்பம் நேரிடும் போதெல்லாம் ஜிப்ரீல் என் முன்னே தோன்றி இவ்வாறு கூறுவார்: "முஹம்மதே! {(ஸல்)} நீர் கூறுவீராக: 'என்றுமே இறவாத உயிருள்ளவன் மீது நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன். எவ்வித மகனையும் தனக்கென எடுத்துக்கொள்ளாதவனும், தனது ஆட்சியில் எவ்விதக் கூட்டாளியும் இல்லாதவனும், சிறுமையிலிருந்து தன்னைக் காக்கும் துணையாளன் எவனும் தேவைப்படாதவனுமாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது.' மேலும், அவனுடைய பெருமையை நீர் பெருமளவாகப் போற்றிப் புகழ்வீராக."

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பார்வை ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வை நோக்கியே அமைந்திருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்களின் இந்தப் பண்பின் உயர்த்தரத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஓர் உரையில் இவ்வாறு விவரித்துள்ளார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்விடம் எத்தகைய தவக்குல் இருந்தது என்றால், ஒவ்வொரு இன்னலின் போதும் சிரமத்தின் போதும் அவனையே நம்பியிருப்பார்கள்; அவனைத்

தவிர மற்ற எல்லாப் பொருட்களிலிருந்தும் தம் கவனத்தைத் திருப்பிக்கொள்வார்கள். இன்றைய சூஃபிகளைப் போல் நபி (ஸல்) அவர்கள் காரணிகளைக் கைவிட்டவராக இருக்கவில்லை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. காரணிகளைப் பயன்படுத்தி வந்தார்கள்தான்; ஏனெனில், காரணிகளைக் கைவிடுவது இறைவனின் படைப்புகளை இழிவுபடுத்துவதற்கும் அவனது படைப்பை வீணானது என முடிவு செய்வதற்கும் சமமாகும். ஆனால், காரணிகளை ஆயத்தம் செய்த பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் முற்றிலுமாக இறைவனேயே சார்ந்திருந்தார்கள். ஆக, காரணிகளை ஆயத்தம் செய்தபோதிலும், அவற்றின் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்கவோ அல்லது அவற்றை நம்பியிருக்கவோ மாட்டார்கள்; மாறாக, இறைவனின் அருளை மட்டுமே எதிர்பார்த்திப்பார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தவொரு பதற்றமான சூழ்நிலையிலும் இவ்வாறு துஆ செய்வார்கள்:

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ ۖ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ رَبُّ السَّمٰوٰتِ وَرَبُّ الْأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْكَرِيمِ

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை; அவன் மகத்தான அரியணையின் இறைவன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை; அவன் வானங்களின் இறைவன், பூமியின் இறைவன், மகத்தான அரியணையின் இறைவன்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பல்வேறு தருணங்களில் மக்கத்து இணைவைப்பாளர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் முன்மொழிவுகளை எடுத்து வைத்தல், அதாவது, பல்வேறு வகையான பேராசைக் காட்டுதல், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது இணையற்ற தவக்குல் வைத்து பதில் அளித்தல் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வரலாற்று நிகழ்வுகளை காட்சிப்படுத்திக் கூறும்போது, இவ்வாறு விவரித்துள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தவ்ஹீதைக் குறித்து மக்களுக்கு அறிவுரை வழங்கத் தொடங்கி, இணைவைப்பை மறுக்கத் தொடங்கிய போது, அது மக்கத்தினருக்குப் பெரும் விரும்பத்தகாத ஒன்றாக அமைந்தது. இறுதியாக ஒரு நாள் காஃபிர்கள் ஒன்றிணைந்து, ஒரு குழுவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபூதாலிபிடம் வந்தனர்.

அவரிடம், ‘நீங்கள் எங்கள் சமுதாயத்தின் தலைவராக இருக்கின்றீர்கள்; நாங்கள் உங்களைப் பெரிதும் மதிக்கிறோம். உங்கள் மீதான மரியாதை காரணமாகவே நாங்கள் உங்கள் சகோதரன் மகனை எதுவும் சொல்வதில்லை. ஆனால் இப்போது விஷயம் எல்லை மீறிவிட்டது. எங்களுடைய சார்பில் நீங்கள் அவருடன் இந்த விஷயத்தில் இறுதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதற்காகவே உங்களிடம் வந்துள்ளோம்’ என்று கூறினர். பின்னர் உத்பா பின் ரபீஆ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறிய அதே விஷயங்களைக் கூறினார்கள். அதாவது உயர்குடியைச் சேர்ந்த, மிக அழகிய பெண் பற்றிய ஆசை, பணத்தாசை, செல்வ ஆசை, ஆட்சி ஆசை ஆகியவற்றைக் காட்டி இந்த மக்கள், ‘ஆனால் எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருக்கும் அளவுக்கு அவர் நடந்து கொள்ள வேண்டும் என்று அவரிடம்

கூறுங்கள். அவர் எங்கள் சிலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருந்தால் மட்டும் போதும் என்றுதான் கூறுகின்றோம். அவர் எங்களின் இந்த முன்மொழிவுகளில் ஒன்றைக்கூட ஏற்றுக்கொள்ளாவிட்டால், நீங்கள் அவருக்குத் துணை நிற்பதை விட்டுவிடுங்கள்; நாங்களே அவரைப் பார்த்துக்கொள்கின்றோம்' என்று கூறினர்.

அபூதாலிப் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அழைத்துவரச்செய்து, அவர்களுடைய முன்மொழிவுகளைப் குறிப்பிட்டவாறு அவர்களின் இந்தக் கேரிக்கையை முன்னால் வைத்தார்: 'சுருங்கக் கூறின், அவர் எந்தக் கோரிக்கையை வைத்தாலும் அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கின்றோம்; அவர் எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருந்தால் மட்டும் போதும்.'

பெருமானார் (ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தையின் இந்நிலையைக் கண்ட போது, அவரது பேருதவிகளை நினைவுகூர்ந்து அன்னாரின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. எனினும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பெரிய தந்தையே! நீங்கள் எனக்கு உதவ வேண்டும் என்றோ நான் கூறவில்லை; நீங்கள் தாராளமாக உங்கள் சமுதாயத்துக்குத் தோள் கொடுங்கள், என்னை விட்டுவிடுங்கள். இறைவன் மீது ஆணையாக! இவர்கள் என் வலக்கரத்தில் சூரியனையும், இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டு வந்து நிறுத்தினாலும் சரி, அப்போதும் நான் ஏக இறைவனைப் பற்றி எடுத்துக் கூறுவதிலிருந்து பின்வாங்க மாட்டேன்."

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இது அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையிலும் முழுமையான தவக்குலிலும் வேறு எங்கும் தென்படாத உயரிய நிலையாகும். இந்நிகழ்வைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்: "இணைவைப்பாளர்கள் அசுத்தமானவர்கள், தூய்மையற்றவர்கள், ஷர்ருல் பரிய்யா (படைப்புகளிலேயே மிகவும் தீயவர்கள்), ஸுஃபஹாஃ, (அறிவீனர்கள்) மற்றும் ஷைத்தானின் சந்ததிகள் என்றும், அவர்களின் கடவுள்கள் வகூதுன்னார் (நரகத்தின் எரிபொருட்கள்) மற்றும் ஹஸபு ஜஹன்னம் (நரகத்தின் விறகுகள்) என்றும் திருக்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட போது, அபூதாலிப் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அழைத்து, 'என் சகோதரன் மகனே! இப்பொழுது உமது பழித்துரைத்தலால் சமுதாயத்தினர் கடுமையாகக் கோபமடைந்துள்ளனர். அவர்கள் உம்மையும் அழித்து, என்னையும் சேர்த்து அழித்துவிடும் நிலை வந்துவிட்டது.

நீர் அவர்களின் அறிஞர்களை மதியீனர்கள் என்று கூறிவிட்டீர்; பெரியோர்களை ஷர்ருல் பரிய்யா (படைப்புகளிலேயே மிகவும் தீயவர்கள்) என்று கூறிவிட்டீர்; அவர்களுடைய மதிப்பிற்குரிய கடவுள்களுக்கு ஹஸபு ஜஹன்னம் (நரகத்தின் விறகுகள்) என்றும் வகூதுன்னார் (நரக நெருப்பின் எரிபொருட்கள்) என்றும் பெயரிட்டுள்ளீர்; பொதுப்படையாக அவர்கள் அனைவரையும் அசுத்தமானவர்கள், ஷைத்தானின் சந்ததிகள் மற்றும் தூய்மையற்றவர்கள் என்று முடிவு செய்துள்ளீர். நலன்விரும்பி என்ற முறையில் உமக்குக் கூறுகின்றேன், உமது நாவைக் கட்டுப்படுத்துவீராக, பழித்துப் பேசுவதிலிருந்து பின்வாங்குவீராக; இல்லையெனில் சமுதாயத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் எனக்கு இல்லை' என்று கூறினார்."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பதிலளிக்கும் போது கூறினார்கள்: "பெரிய தந்தையே! இது வசவு மொழியல்ல; மாறாக, உண்மையின் வெளிப்பாடும், நிகழ்ந்ததை அதற்குரிய இடத்தில் தெளிவுபடுத்துவதும் ஆகும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதன் மூலம் எனக்கு மரணம் வரினும், அம்மரணத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றேன். என் வாழ்வு இவ்வழியிலேயே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மரண பயத்தால் உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்து நான் (பின்வாங்கி) நின்றுவிட முடியாது.

பெரிய தந்தையே! உங்களின் பலவீனத்தையும் சிரமத்தையும் குறித்து நீங்கள் கவலைப்பட்டால், என்னை உங்கள் அடைக்கலத்தில் வைத்திருப்பதிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களின் தேவை எள்ளளவும் இல்லை. இறைக் கட்டளைகளைக் கொண்டு சேர்ப்பதிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். என் எஜமானனின் கட்டளைகள் எனக்கு என் உயிரை விட மேலானவை. இறைவன் மீது ஆணையாக! இவ்வழியில் நான் கொல்லப்பட்டாலும், மீண்டும் மீண்டும் உயிர்பெற்று வந்து எப்போதும் இவ்வழியிலேயே மரணித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்றே விரும்புகின்றேன். இது அச்சத்திற்குரிய இடமன்று; மாறாக, அவனது வழியில் துன்பங்களை ஏற்பதில் எனக்கு அளப்பரிய பேரின்பம் உள்ளது."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த உரையை ஆற்றிக் கொண்டிருந்த போது, அன்னாரின் முகத்தில் உண்மையினாலும் ஒளியினாலும் நிறைந்த நெகிழ்ச்சி வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உரையை நிறைவு செய்தததும், உண்மையின் ஒளியைக் கண்டு அபூதாலிபின் கண்கள் கட்டுப்பாடின்றி கண்ணீரைப் பொழிந்தன. அவர், 'உமது இந்த உயரிய நிலையை நான் அறியாதிருந்தேன்; நீர் வேறு ஒரு வண்ணத்திலும் வேறு ஒரு மேன்மையிலும் இருக்கின்றீர்! செல்வீராக! உமது பணியைத் தொடர்ந்து செய்வீராக. நான் உயிருடன் இருக்கும் வரை, எனக்கு ஆற்றல் இருக்கும் அளவுக்கு நான் உமக்கு உறுதுணையாக நிற்பேன்' என்று கூறினார்.

அதே போன்று தாயிஃபிலிருந்து திரும்பிய போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறைநம்பிக்கையின் ஒரு நிகழ்வும் உள்ளது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் தன்னந்தனியாகத் தாயிஃபின் தலைவர்களுக்குத் தப்லீக் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றார்கள்; அத்தலைவர்களோ அநியாயத்தின் எல்லைக்கே சென்றனர். திரும்பி வருகிறார்கள். வெளிப்படையில் பார்க்கையில், மக்காவிற்குள் நுழைவதற்கும் எவ்வித வழியும் தென்படவில்லை. அன்னாருடன் ஒரு தொண்டர் இருக்கிறார்; 'இனி என்ன நிகழுமோ?' என்று அந்தத் தொண்டர் கவலையோடு இருக்கிறார். ஆனால் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்குத் தம் இறைவனின் மீது முழுமையான உறுதியும், முழுமையான தவக்குலும் இருக்கிறது. இந்நிகழ்வைக் குறிப்பிட்டு, அதே தொண்டர் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'யா ரஸூலல்லாஹ்! மக்கத்தினர் தங்களை வெளியேற்றிவிட்ட நிலையில், இப்போது தாங்கள் எவ்வாறு மக்காவிற்குள் நுழைவீர்கள்?' என்று பணிவுடன் வினவிய போது, மாநபி (ஸல்) அவர்கள் எத்தகைய கம்பீரமான தவக்குலுடன் பதிலளித்தார்கள் பாருங்கள்:

“ஸைதே! அல்லாஹ் நிச்சயமாக ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவதை நீர் காண்பீர்; அல்லாஹ் தன் மார்க்கத்திற்கு உதவியாளனாக இருக்கின்றான்; அவன் தன் நபியை வெற்றியடையச் செய்தே தீருவான்” என்று கூறினார்கள். அதன்படியே மாநபி (ஸல்) அவர்கள் தம்மைத் தம் அடைக்கலத்தில் ஏற்று மக்காவிற்குள் நுழைவதற்கு ஏற்பாடு செய்யுமாறு குறைஷிகளின் தலைவர்களுக்குச் செய்தி அனுப்பினார்கள். அனைத்துத் தலைவர்களும் மறுத்துவிட்டனர்; இறுதியாக முத்இம் பின் அதீ எனும் கண்ணியமிக்க ஒரு தலைவர், மாநபி (ஸல்) அவர்களைத் தம் அடைக்கலத்தில் மக்காவிற்குள் நுழையச் செய்வதாக அறிவித்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது அன்னாருக்கு அல்லாஹ்வின் மீதிருந்த தவக்குலின் முன்மாதிரிகள் எவை? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி கிடைத்த போது, அன்னார் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் தம் ஹிஜ்ரத் திட்டத்தைத் தெரிவித்து, அவர்களிடம் ஓர் உயிர்த் தியாகப் பணியை ஒப்படைத்தார்கள். அதாவது, அவர்கள் அன்று இரவு நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய படுக்கையில் அன்னார் போர்த்திக் கொண்டு உறங்கி வந்த பச்சை நிறப் போர்வையை - ஓர் அறிவிப்பின்படி சிவப்பு நிற ஹஸ்ரமீ போர்வையை - போர்த்திக் கொண்டு உறங்க வேண்டும். தம் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்த, தம்மை மாய்த்துக் கொண்ட அந்தத் தொண்டருக்கு இறைவனின் ஆதரவும் உதவியும் கிடைக்கும் என்ற உறுதியை அளித்து, “கவலைப்படாதீர்! மிகவும் நிம்மதியாக என் படுக்கையில் உறங்குவீர்; எதிரிகளால் உமது ஒரு தலைமுடியைக்கூட அசைக்க முடியாது” என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் இல்லத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். அப்போது மக்கத்துக் காஃபிர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் - அவர்களின் கண்களில் இரத்தம் வடிவது போல் கொடூரம் நிறைந்திருந்தது - கைகளில் வாள்களை ஏந்தியவாறு, சரியாக அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இல்லத்திற்கு வெளியே மிக விழிப்புடன் காவல் காத்துக் கொண்டிருந்தனர். இரவு ஆழமானதும் நாம் தாக்குதல் நடத்தி ஒரே வாள் வீச்சில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கதையை முடித்துவிட வேண்டும் என்பதே அவர்களின் திட்டமாக இருந்தது - நவூதுபில்லாஹ்.

அவர்களின் தலைவனாகச் செயல்பட்ட அபூஜஹ்ல் மிகுந்த அகந்தையோடும் ஏளனத்தோடும், ‘முஹம்மத் {(ஸல்)} கூறுகின்றார்: நீங்கள் இவருடைய விஷயத்தில் இவரைப் பின்பற்றினால், அரபிகளுக்கும் அரபி அல்லாதவர்களுக்கும் அரசர்களாகிவிடுவீர்களாம்; பின்னர் மரணத்திற்குப் பிறகு நீங்கள் உயிர்ப்பிக்கப்படுவீர்களாம்; அப்பொழுது உங்களுக்கு ஜோர்டான் தோட்டங்களைப் போன்ற சோலைகள் அமைக்கப்படுமாம்; நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்களிடையே படுகொலை நடக்குமாம்’ என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

மாநபி (ஸல்) அவர்கள் வெளியே வந்து, “ஆம், நான் அவ்வாறே கூறுகின்றேன்” என்று கூறியவாறு, சூரா யாஸீனின் முதல் 10 வசனங்களை ஓதிக்கொண்டே அவர்களின் தலைகளில் மண்ணைத் தூவியவாறு, அவர்களுக்கு முன்பாகச் கடந்து சென்று விட்டார்கள். ஆனால் இறைவனின் வல்லமையினால், ஹுஸூர் (ஸல்) அவர்கள் செல்லும் போது, யாருக்கும் தென்படவில்லை! மாறாக, அந்த மக்கள்

அவ்வப்போது உள்ளே எட்டிப் பார்த்து, ஹஸ்ரத் முஹம்மத் {(ஸல்)} அவர்கள் தம் படுக்கையில்தான் இருக்கின்றார்கள் என்று திருப்தியடைந்து கொள்வார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹிஜ்ரத் நிகழ்வையும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தவக்குலையும் வீரத்தையும் குறித்துக் குறிப்பிடுகையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முற்றுகையிடப்பட்ட அந்த நெருக்கடியான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் உண்மைத்துவம் வெளிப்பட்டது..... இத்தகைய சூழ்நிலையில்தான் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தமது உண்மைத்துவம் மற்றும் நன்றியுணர்வுக்கான எத்தகைய முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள் என்றால், உலகம் இருக்கும் நாள் வரை அது ஒரு முன்மாதிரியாகத் திகழும்..... எதிரிகள் குகையின் முகப்பில் நின்று கொண்டிருக்கின்றனர்; பலவிதமான கருத்துகளைப் பேசிக் கொண்டிருக்கின்றனர். சிலர், 'இக்குகையை சோதனைப் போடுங்கள், ஏனெனில் காலடித் தடம் இங்கு வரை வந்துதான் முடிகின்றது' என்று கூறுகின்றனர். ஆனால் அவர்களில் சிலர், 'இங்கே மனிதன் எவ்வாறு நுழைய முடியும்? சிலந்தி வலை பின்னியிருக்கின்றது, புறா முட்டையிட்டுள்ளது' என்று கூறுகின்றனர்.

இத்தகைய பேச்சுகளின் ஒலிகள் உள்ளே கேட்கின்றன; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முடிவு கட்ட வேண்டும் என்ற நிலையில் பகைவர்கள் வந்துள்ளனர். வெறிபிடித்தவர்களைப் போல் திரண்டு வந்துள்ளனர்; ஆனால் மாநபி (ஸல்) அவர்களின் இணையற்ற வீரத்தைப் பாருங்கள்! எதிரி தலைமாட்டில் நிற்கின்றான்; நபி (ஸல்) அவர்கள் தம் உண்மைத் தோழரான ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்களிடம் கூறுகின்றார்கள்: لَاتَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا இந்தச் சொற்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் நாவினாலேயே கூறினார்கள் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன; ஏனெனில், இவற்றைக் கூற ஓசை தேவை. வெறும் செய்கை மூலம் வேலை நடக்காது. வெளியே எதிரிகள் ஆலோசனை செய்து கொண்டிருக்கின்றனர்; உள்ளே குகையிலோ தலைவரும் தொண்டரும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். எதிரிகள் ஓசையைக் கேட்டுவிடுவார்களோ என்று கவலை கொள்ளவில்லை. இது அல்லாஹ்வின் மீதான முழுமையான ஈமானுக்கும் இறைஞானத்திற்கும் சான்றாகும். இறைவனின் வாக்குறுதிகள் மீது அவர்களுக்கு இருந்த முழு நம்பிக்கையாகும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ ﷺ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْیِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**